## நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர்:– திரு.கா.மெகராஜ், இ.ஆ.ப

<u>ந.க.எண்.2481/2013/பே2</u> <u>நாள். .08.2020.</u>

பொருள்: பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – நாமக்கல் மாவட்டம் – பேரூராட்சிகளில் 1998–1999 முதல் 2013–2014 வரை ஏற்பட்ட காலிப்பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீட்டின்படி இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பணிமாறுதல் மூலம் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ 1), நாள்.31.08.2018.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2481/2013/பே3, நாள்.08.11.2018.
3. சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பணிச்சான்று அறிக்கைகள்.
4. அரசு ஆணை எண். 191 பொதுதுறை நாள்.01.02.1962.

******

<u>ஆணை</u>

பார்வை 1–இல் காணும் அரசாணையில் பேரூராட்சிகளில் 1998–1999 முதல் 2013–2014 வரை ஏற்பட்ட காலிப்பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீட்டின்படி வரித்தண்டலர் பணியிடங்களில் பணிமாறுதல் மூலம் நியமனம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பார்வை 2–இல் காணும் நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆணையின்படி கீழ்க்கண்ட பேரூராட்சிகளில் வரித்தண்டலர்களாக பணியிடம் வழங்கப்பட்டு தனியர்கள் ஏதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். பார்வை 3–இல் காணும் சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து கீழ்க்காணும் பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தண்டனைகள் ஏதும் நிலுவையில்லை எனவும் பணிச்சான்று அளிக்கப்பட்டுள்ளது.

....2

| வ. எண். | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | அ.அப்பாவு வரித்தண்டலர் | நாமகிரிப்பேட்டை | 09.11.2018 மு.ப. | 09.11.2018 மு.ப. |
| 2 | லோ.பன்னீர்செல்வம் வரித்தண்டலர் | பொத்தனூர் | 09.11.2018 பி.ப. | 09.11.2018 பி.ப. |
| 3 | மா.விஜயக்குமார் வரித்தண்டலர் | வேலூர் | 09.11.2018 மு.ப. | 09.11.2018 மு.ப. |
| 4 | மா.கேசவமூர்த்தி வரித்தண்டலர் | காளப்பநாயக்கன்பட்டி | 12.11.2018 மு.ப. | 12.11.2018 மு.ப. |

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழியாக தேர்வு செய்து பணியமர்ந்தப்பட்டவர்கள் பணியில் சேர்ந்த கொண்ட நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என பார்வை 4–இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் காணும் அரசாணையின்படி, மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்த பணியாளர்கள் என்பதால், தனியர்களின் பணியினை வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

25/8/2020

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
நாமக்கல்.

பெறுநர்

25/8/2020

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்,
நாமக்கல் மாவட்டம் (செயல் அலுவலர் மூலமாக)
நகல். சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர், நாமக்கல் மாவட்டம்
நகல். "பே2" இருக்கை –இருப்புக் கோப்புக்கு

\\Adtp3\i\D\TP-III-2015\2481-2013-TP3.doc